RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s410

OPEN ACCESS

# கரிசல் கதைகள் கூறும் வாழ்வியல்

சா.ஞா. எஸ்தர் அருள் மேரி [அ, *]

[அ] தமிழ்த்துறை, மகளிர் கிறித்தவக் கல்லூரி, சென்னை-600006, தமிழ்நாடு, இந்தியா.

# Life Style Voiced Through Karisal Stories

**S.G. Esther Arul Mary** [a, *]

[a] Department of Tamil, Women's Christian College, Chennai-600006, Tamil Nadu, India

* Corresponding Author:
estherarulmary@wcc.edu.in

Received: 13-04-2022
Revised: 23-04-2022
Accepted: 27-04-2022
Published: 09-07-2022

**ABSTRACT**

Karisal (Black soil) regional literature reveals the soil and the sense of mind. A collection of short stories by R. S. Jacob called The Karisal region Tales reveals the culture of the Karisal community. Karisal region tales depict the lifestyles of diverse peoples. These stories depict the reality of the Karisal people and their mental state. They have a wide variety of beliefs, including beliefs about disease, demons, and nature. They live in a society where education is not important. Women are subject to restrictions on morals and social status. Feminism has existed in that society. Industrial practices include cotton production, new grain cultivation, and the palm industry. Proverbs, traditions, names and dialects are found in the customs of the people of Karisal. Cultural jargon of the people has been used. Dietary patterns depend on nature. The literature suggests that recreation and games that show physical strength are found in these. The names of nouns, the names of the people and the reasons for them are featured in the stories.

**Keywords:** Landscape Architecture, Land Structure, Conceptual Frameworks

## முன்னுரை

கரிசல் நில மக்களின் வாழ்நிலையை மையமாக வைத்து இலக்கிய வாதிகள் பலரும் கடந்த ஐம்பது ஆண்டுகளாக படைப்பிலக்கியங்களில் தாம் கண்டுணர்ந்த அனுபவங்களைப் பதிவு செய்து வருகின்றனர். கரிசல் காட்டு மக்களின் யதார்த்தப் போக்கு, உழைப்பிற்கு அளித்த உன்னத நிலை, இயற்கை சார்ந்த வாழ்வியல் நெறிகள், ஒற்றுமையுணர்வு என பலவித செய்திகளைக் கரிசல் இலக்கியங்கள் பறை சாற்றுகின்றன. கரிசல் காட்டுக்கதைகள் எனும் நூலில் இடம்பெற்றுள்ள இருபத்தியோரு கதைகளும் இவ்வாய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது (Jacob, 2019). கரிசல் காட்டு மாந்தரின் சமூக வாழ்வியலை மையமாக வைத்து எழுதியிருப்பினும் ஒட்டு மொத்த மாந்தர் இனத்துக்குமான செய்திகள் இந்நூலில் புதைந்துள்ளன. தற்கால மக்களின் வாழ்வியலை மட்டும் கூறாது ஒரு நூற்றுண்டு காலச் சமூக வாழ்வியலை அவரது கதைகள் சித்தரிக்கின்றன.

## கரிசல் நிலம்

கரிசல் என்பது அந்த நிலம் சார்ந்த மண்ணின் பெயர். கரிசல் என்பது ஒரு வகை மண். இது பெரும்பாலும் தண்ணீரை உறிஞ்சும் தன்மை கொண்டது. இம்மண்ணில் பருத்தி, கரும்பு, வாழை, உளுந்து போன்ற பயிர்கள் வளரும். தமிழ்நாட்டில் சேலம், கோவை மாவட்டங்களிலும் பெரும்பாலான

தென் மாவட்டங்களிலும் இவ்வகை மண் உள்ளது. பெரும்பாலும் மண்ணையும், மழையையும் நம்பி வாழ்கின்ற இப்பகுதி மக்களின் வாழ்வியல் அனுபவம் என்பது தனித்தன்மை வாய்ந்ததாகும். கடுமையான உழைப்பும், மன உறுதியும் கொண்ட இப்பகுதி விவசாயிகள் கடந்து வந்த பாதை மிகவும் கடுமையானது. இத்தகைய வாழ்வியல் சூழ்நிலையில் வாழ்ந்து வருகிற மக்களின் அனுபவத்தை இங்கு வாழ்ந்த எழுத்தாளர்கள் தங்கள் எழுத்தில் பதிவு செய்தார்கள். கரிசல் இலக்கியம் என்றதும் நினைவுக்கு வரும் முதல் எழுத்தாளர் கோவில்பட்டி அருகில் உள்ள இடைசெவல் என்ற கிராமத்தில் பிறந்த கி ராஜநாராயணன். அவர் தன் மண் மீது உள்ள காதலால் தன் படைப்புகளுக்கு அவ்வாறு பெயரிட்டுள்ளார். அப்போது தான் மண்சார்ந்த வட்டார இலக்கியம் தோன்ற ஆரம்பித்தது (Ilasai Aruna,1976; Sibichelvan, 2010)

## கரிசல் இலக்கியப் படைப்புகள்

பல பன்முகத்தன்மை கொண்ட தமிழ் இலக்கியத்தில் வட்டாரம் சார்ந்த இலக்கியம் ஒரு முக்கியப் பங்கை வகிக்கின்றது. தமிழ் மொழியிலேயே கரிசல் இலக்கியப் படைப்புகள் பல தோன்றியுள்ளன. இவற்றைக் கொங்கு மண்டல இலக்கியம், தஞ்சை வட்டார இலக்கியம், மதுரை மண் இலக்கியம், நாஞ்சில் நாட்டு இலக்கியம், நெல்லைச் சீமை இலக்கியம், பழைய ஆற்காடு பகுதி இலக்கியம் என்று பல வகைப்படுத்தலாம். அந்த வகையில் தெற்குச் சீமையில் நெல்லை, தூத்துக்குடி, விருதுநகர், மற்றும் தேனி, மதுரை, ராமநாதபுரம் மாவட்டங்களில் தென் பகுதியிலுள்ள கரிசல் மண்ணில் உதித்த இலக்கியங்கள் விவசாயிகளுடைய பாடுகளையும், ரணங்களையும் வெளிப்படுத்துகின்றன.

‘அக்னி வெயிலிலும் கந்தக பூமியிலும் அங்குள்ள மக்கள் சந்திக்கின்ற வதைகள் மகிழ்ச்சிகளை அந்த மண் சார்ந்த மொழிநடையில் இலக்கியங்கள் கடந்த அரை நூற்றாண்டு காலமாக சொல்லி வருகின்றன. தமிழகத்தில் கரிசல் நிலப்பகுதி தனித்த புவியியல் அமைப்பைக் கொண்டதாக உள்ளது. தஞ்சை மாவட்டத்தில் வாழும் மக்களின் வாழ்வியல் அனுபவத்திலிருந்து கரிசல் நிலப் பகுதியில் வாழும் மக்களின் வாழ்வியல் மாறுபட்டதாக உள்ளது என்பதை அறியலாம். காவிரி நீர் வாசத்தில் அங்குள்ள மக்கள் கலைகளிலும், இசையிலும் நாட்டம் உள்ளவர்கள் என்பதை அறிய முடிகிறது’ (Radhakrishnan, 2016)

இலக்கியவாதிகள் தான் வாழும் கரிசல் பகுதியில் உள்ள மக்களின் வாழ்வியலில் உள்ள இன்ப துன்பங்களை அழகுணர்ச்சி, கலை மற்றும் இயற்கை நுகர்வை, உணவு பழக்கவழக்கங்களை, கலாச்சாரக் கூறுகளைத் தம்முடைய படைப்புகளில் மிக நுட்பமாகப் பதிவு செய்துள்ளனர். சிறு கதைகள், குறுநாவல்கள், கட்டுரைகள், கவிதைகள், நடை சித்திரங்கள், கடிதங்கள் என்று எதை எழுதினாலும் தனித்துவத்துடனும், கரிசல் முத்திரையுடனும் இவர்களின் சகல படைப்புகளும் திகழ்கின்றன. ‘இன்று கரிசல் இலக்கியம் தள்ளுபடி செய்ய முடியாத அளவுக்கு மகசூல் பெருகத் தொடங்கிவிட்டன. அதன் பொருட்டு யாரும் மெனக்கெட்டு காரியம் செய்யவில்லை என வியக்கும் அளவு மது மாது என்று விளைச்சல் ஆகிவிட்டது” (Jeyaprakasaam, 2019).

தமிழ் மொழிக்கும், பண்பாட்டு கலாச்சார இலக்கியத்திற்கும் கரிசல் எழுத்தாளர்கள் செய்துள்ள பணிகள் காலம் உள்ளவரை நிலைத்து நிற்கும். கரிசல் இலக்கியம் என்பது இலக்கிய வகைப்பாட்டில் மண் சார்ந்த பொருண்மையைக் குறிப்பிடுகிறது (Ilasai Aruna,1976). மண் சார்ந்த மக்கள் வாழ்வியல் என்பது உலக நெறிகளில் ஒன்று. மக்கள் தான் வாழும் நிலப்பரப்பில் வாழ்வாதாரங்களை உற்பத்தி பண்ணுகிற உணவு, வாழ்விடம், அமைப்பு, பிற உயிரினங்களோடு கொண்ட உறவு, மொழி என்ற கருத்தியல் கட்டமைப்புகள் மண் சார்ந்த இலக்கியங்களாக வெளிப்படுகின்றன. மண்ணும், மனித உறவுகளும் என்று கூறுவது போல் மண்ணோடு மக்கள் கொண்ட உறவுதான் வட்டார இலக்கியம் உருவாவதற்கு அடிப்படைக் காரணமாக அமைகின்றன (Sibichelvan, 2010). மக்களின் மொழியில் உதயமாகி கரிசல் இலக்கியமாக வளர்ந்தன.

## கரிசல் வட்டார இலக்கியப் போக்கு

கரிசல் வட்டார இலக்கியங்களில் மக்களின் மண்ணையும், மன உணர்வையும் வெளிப்படுத்தும் போக்குகள் அதிகம் காணப்பட்டன. மனிதர்களின் மொழிக்கும் பண்பாட்டுக்கும் உள்ள உறவை கரிசல் வட்டார இலக்கியங்கள் மிகுதியாக வெளிப்படுத்தின. வானம் பார்த்த பூமி, மானாவாரி காடு என்று இயற்கை கட்டமைந்த வாழ்வியல் நில அமைப்பைக் கொண்டவை. கரிசல் நிலம். மானாவாரி மனிதர்கள் சுயமாக வாழ்க்கையைக் கற்று வாழ்வின் அடிப்படையை உணர்ந்து கொண்டவர்கள். நீர், நிலம். இயற்கையால் வஞ்சிக்கப்பட்ட நிலம், கடுமையான உழைப்பு சார்ந்த வாழ்வியல் அமைப்பைக் கொண்டவர்களாதலால் இவர்களின் வாழ்வியல் மனப்போராட்டம் சார்ந்தது.

## கரிசல்காட்டு கதைகள் - ஆர் எஸ் ஜேக்கப்

"இந்நூலில் உள்ளவை வெறும் சிறுகதைகள் மட்டும் அல்ல. கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டு காலச் சமூக வாழ்வியலின் ஆவணப்பட பதிவு எனலாம்" (Gouthama Neelambaran, 2015). அதற்கு முந்தைய பல தலைமுறைகளின் வாழ்வியலும் இக்கதைகளில் பேசப்படுகின்றன. தியாகிகளின் வீர வரலாறு பேசப்படுகிறது. கனமான விஷயங்கள் நிறைய இருப்பினும், சொல்லும் விதத்தில் கலகலப்பு, நகைச்சுவை, நக்கல், நையாண்டி என்ற எதற்குமே பஞ்சமில்லை. நிலப்பிரபுத்துவக் கொடுமை, தோள்சீலை போராட்டம் முதலான தீக்கங்குகள் போன்ற விஷயங்களை எளிமையான கதைகளிலும் பதிவு செய்ய முடியும் என்று சாதித்திருக்கிறார் இக்கதையின் ஆசிரியர்.

## வாழ்வியல்

கரிசல் காட்டு மக்களின் வாழ்வியல் என்பது அவர்களது பண்பாடு மற்றும் நடைமுறை வாழ்க்கைச் சார்ந்தது. உழைப்பை மட்டுமே வாழ்வாதாரமாகக் கொண்டு பயணிக்கும் மக்களின் எண்ண ஓட்டங்கள், நம்பிக்கைகள், தொழில் முறைகள், வழக்காறுகள் உணவு முறைகள், பொழுது போக்குகள், வழிபாடுகள், பழக்கவழக்கங்கள என்று பலதரப்பட்ட வாழ்க்கை முறைகளைக் கரிசல் காட்டுக் கதைகள் சித்தரிக்கின்றன.

'கரிசல் கதைகளுக்கு தனி மவுசு உண்டு மஞ்சனத்தி பூ போன்று மணக்கும் பணம் படைத்தவன் போல இனிக்கும்' கரிசல் காட்டு மண் மணம் பன்முகம் கொண்டது (Jacob, 2019). அதில் ஒளிவு மறைவும் கற்பனை அலங்காரமும் எதுவும் கிடையாது. கரிசல்காட்டு கலாச்சாரமே தனி. 'கரிசல் காட்டு வாழ்வு தனி சுகம். குளத்தில் தண்ணீர் வந்தால் நஞ்சை, தண்ணி இல்லாட்டா புஞ்சை சாகுபடி, பெரும்பாலும் வறட்சியான கரிசல் காடு. கரிசல் காடு நம்மைப் பெற்ற தாய் வீடு.' (Ponneelan, 1976).

## கரிசல் மக்களின் யாதார்த்த நிலை

கரிசல் காட்டு மக்கள் உழைப்பின் விளிம்பில் வாழ்வை நடத்துபவர்கள். அரசை எதிர்பார்த்து வாழாதவர்கள். வெளிப்படையான பேச்சும், தீமையையும் நன்மையாக மாற்றும் திறனும் உடையவர்கள். 'எந்த அரசும் எங்களை நினைத்ததில்லை' 'வறுமை சட்டியில் வாழும் போதும் மேல்நோக்கி பார்ப்போம்' என்ற வரிகள் அவர்களது மனநிலையை எடுத்துரைக்கிறது. அவர்களது மனப்பான்மையைக் கூறும் பொழுது, 'கரிசல் காட்டு மக்களின் விரிசல்கள் அன்பின் நெருக்கமாக மாறிவிடும். தீமையை நன்மையாக மாற்றுவதில் கரிசல் மக்கள் கைதேர்ந்தவர்கள்' என்று குறிப்பிடுகிறார் (Jacob, 2019). கரிசல் சமுதாயத்தில் முதலாளி தொழிலாளி வர்க்க வேறுபாடு காணப்பட்டது. வயிற்றுக்கு உணவு கிடைத்தால் போதும் என்ற மனநிலையில் பலர் வாழ்ந்தனர். விவசாய மக்களிடம் விழிப்புணர்வு இல்லை என்பதனை இக்கதைகள் சித்தரிக்கின்றன.

'பக்கத்து ஊர் மாவிடி பண்ணையார் இருந்தார். அவர் மக்களை அடிமைகளாக நடத்தினார். பண்ணையாரை நம்பி வாழ்ந்த பலர் பட்டினி கிடந்து செத்தார்கள். வயிற்றுக்குக் கஞ்சி கிடைத்தால் போதும் என்று எண்ணிய உணர்வற்ற காலம். விவசாய மக்களிடம் விழிப்புணர்வு இல்லாத நாட்கள்"

என்று பண்ணையாரை நம்பி வாழும் பள்ளரின் வாழ்வு நிலை இக்கதையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது (Jacob, 2019).

## நம்பிக்கை

கரிசல் காட்டு மக்களிடம் பலவிதமான நம்பிக்கைகள் காலம் காலமாக இருந்து வருகின்றன. ‘ஓலைப் பாயில் படுத்தால் கண்நோய்கள் சுகமாகும் என்று தாத்தா அடிக்கடி சொல்வார்’ என்ற இயற்கை சார்ந்த நம்பிக்கை அவர்களுக்குள் இருந்தது. ‘அந்தப் படத்தைப் பார்த்த பிறகு கோட்டி பிடித்திருந்தான். இப்படி அனேக பைத்தியங்கள் ஆக வேலை வெட்டி இல்லாமல் அலைந்தார்கள்’ எந்த ஒரு வேலையிலும் ஈடுபாடு இல்லாமல் இருப்பவர்களையும், தன்னிச்சையாக செயல்பட்டுக் கொண்டு இருப்பவர்களையும் கோட்டி பிடித்திருப்பதாக கூறும் நம்பிக்கை அவர்களுக்குள் இருந்தது.

## கல்வி

கரிசல் நில மக்களுக்கு கல்வி மறுக்கப்பட்டு இருந்தது. ஆங்கிலேயரின் வருகைக்குப் பிறகே கல்வி நிறுவனங்கள் தோன்றத் தொடங்கின. கல்வி இல்லாத சமுதாயமாக கரிசல் வட்டாரம் காணப்பட்டதை இக்கதைகள் எடுத்துரைக்கினறன.

‘கல்வி அக்காலங்களில் கல்லில் நார் உரிப்பது மாதிரி இருந்தது. மக்களுக்கு கல்வியில் நாட்டம் கிடையாது. பெற்றோரும் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பாமல் சிறுசிறு பணிகளை செய்ய உடன் கூட்டிச் சென்றனர். 1940-களில் படிப்பில் விருப்பமில்லாத காலமாக இருந்தது. நிலப் பிரபுக்கள் ஜமீன்தார்கள் பள்ளிகளை விரும்பவில்லை. ஏழைகளை வைத்து கூலிகளைப் போல நடத்தினார்கள். பண்ணையாளர்கள் தங்கள் தொழுகைக்கு சிறார்கள் கிடைக்க மாட்டார்கள் என அஞ்சி பள்ளிகள் திறப்பதைக் கடுமையாக எதிர்த்தார்கள். ஜெர்மானிய மிஷினரி பள்ளிகளை திண்ணைகளிலும், வேப்பமர நிழலில் வைத்து நடத்தினார்’ (Jacob, 2019).

## பெண்கள்

கரிசல் கிராமப்பெண்கள் கணவன் பெயரைச் சொல்ல மாட்டார்கள். இது கரிசல் பூமியின் நெறிமுறைகளில் ஒன்று.

‘அந்தக்காலம் பொம்பள புள்ளைங்க இப்படி எல்லாம் கூட முடியாது. சடங்கான பிள்ளைகள் வீட்டை விட்டு வெளியே போகவே கூடாது. பெண்ணடிமைத்தனம் கொடிதாய் இருந்தது. ஒரு மனைவி தன் கணவனிடம் எதிர்த்துப் பேச முடியாது. கணவன் சாப்பிட்ட எச்சில் தட்டில் தான் மனைவி சாப்பிட வேண்டும். கணவன் குளிக்கும் போது மனைவி முதுகு தேய்த்து விடவும, பெண் வெறும் போகப்பொருளாகவும், சோகப் பிறவியாகவும் இருந்தாள். கணவன் குடித்துவிட்டு வந்து சட்டி பானைகளை உடைப்பான். பெண்டு பிள்ளைகளை உதைப்பான்.’ என்று ஆணாதிக்க நிலை குறித்து இக்கதைகள் எடுத்துரைக்கின்றன. கிறித்தவத் திருமண நிகழ்வுகளில் பெண்களிடம் அவர்களது சம்மதத்தைக் கேட்கும் வழக்கம் இருந்துள்ளது. ‘ஒரு திருமண நிகழ்வில் மணமகளிடம் சம்மதமா கேட்டுக்கிட்டு இருக்கீங்க என்றாள். மேலும் கரிசல் வட்டாரப் பெண்களிடம் ’கண்டாங்கி சேலை உடுத்தும் வழக்கம் இருந்துள்ளது. ‘கண்டாங்கி சேலையை எடுத்து முகத்தை மூடி முக்காடு போட்டு விட்டாள்’ என்ற குறிப்பு உள்ளது. நாட்டுப்புறப் பாடல்கள் பெரும்பாலும் பெண்களின் பங்களிப்பே என்பது ஆசிரியரின் கருத்து. பெண்கள் கற்புக்கு முக்கியத்துவம் அளிப்பவர்களாக இருந்துள்ளனர்.

‘வண்ண பொண்ணு ஒழுக்கத்தில் உறுதியானவள். தொண்டு ஊழியம் செய்வதில் வஞ்சனை இல்லாதவள். சாமர்த்தியமாகப் பேசுவாள். ரொம்ப புத்திசாலி. ஊருக்கு மருத்துவச்சியும் அவள்தான். எந்த நிலையிலும் தன் கற்பைக் காத்துக் கொண்டவள்.’ என்று மன உறுதியையும் கற்பின் பெருமையையும் கரிசல் கதைகள் எடுத்துரைக்கின்றன. கரிசல்காட்டு மண்ணும், மொழியும், கற்பும் கரிசல் கலாச்சாரமாக அடையாளம் காட்டப்படுகிறது. கரிசல்காட்டு பெண்கள் கல்யாணம் ஆகி போகும்

இடங்களில் கரிசல் பெருமையை நிலைநாட்ட வேண்டும் என்பது அந்த வட்டார மக்களின் எதிர்பார்ப்பாகும். சடங்கான பிள்ளைகள் வீட்டை விட்டு வெளியே போகக் கூடாது. பெண்ணடிமைத்தனம் கொடிதாய் இருந்ததாக கதையாசிரியர் குறிப்பிடுகிறார் (Jacob, 2019).

## தொழில்

கரிசல் காட்டுப்பகுதி மக்களின் முக்கியத் தொழிலாக பருத்தி விளைவித்தல் கூறப்படுகிறது. 'கருப்பு மண்ணில் வெள்ளைத் தங்கம் போன்று பருத்தி விளையும். அது ஆடைகளாக நாட்டு மக்களின் மானம் காக்கும்' என்று பருத்தி பற்றிய செய்தியும், பருத்தி வியாபாரி பற்றிய செய்தியும் இக்கதைகளில் கூறப்பட்டுள்ளது (Jacob, 2019).

'எங்கள் பனைப் புஞ்சையில் மட்டும் ஐந்து குண்டால் பருத்தி வெடித்தது. குடிகளிடமிருந்து ஐந்து குண்டால் விலைக்கு வாங்கினேன்.' '1940களில் கரிசல் வட்டார பருத்திக்குப் பெரும் கிராக்கி இருந்தது' என்ற கூற்றுகளில் கரிசல் காடுகளின் முக்கிய விளை பொருளாக பருத்தி இருந்தது தெரிய வருகிறது. மேலும் நவதானியங்களை விளைவித்தலும் அம்மக்களின் முக்கியப் பயிர்த்தொழிலாக இருந்துள்ளது என்பது தெரிய வருகிறது. நவதானியங்கள் விளையும் நல்ல கரிசல்காடு என்று கூறப்பட்டுள்ளது (Jacob, 2019).

'களத்துமேட்டில் கம்பங்கள் அடித்துக் கொண்டிருந்தார்கள் ஆடு மாடுகளைப் பூட்டி கம்பம் கதிர் குவியலில் பிணையல் அடிப்பார்கள்… நசுங்கிய கதிர்களை அள்ளிப்போட்டு தானிய மணிகளை சேர்த்தனர்' 'புரட்டாசி மாதம் பயிர் விதைப்பு நேரம். கரிசல் மக்கள் விதைப்பு வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர்' புழுதி விதைப்பு விதைத்தால் உளுந்து ஒரு பிடி பிடிக்கும் என்று பேசிக் கொண்டிருந்தார்கள்' என்ற செய்திகளில்; கரிசல் காட்டு மக்கள் வேளாண்மைத் தொழிலுக்குக் கொடுத்த முக்கியத்துவத்தையும், விதைப்பில் அவர்கள் காட்டிய நுணுக்கங்களையும் அறிய முடிகிறது (Jacob, 2019). கரிசல் காட்டு மக்கள் பாடும் நாட்டுப்பாடல்கள் உழைக்கும் மக்களின் யதார்த்தத்தைப் படம் பிடித்து காட்டுகிறது

## உணவு

கரிசல் வட்டார மக்கள் தம் நிலம் சார்ந்த உணவு வகைகளைப் பெரிதும் உண்டனர். நவதானிய வகை உணவைப் பெரிதும் உண்டனர். கேழ்வரகு, தினை, கொல்லாம் பருப்பு, மொச்சைப் பயறு, சீலா மீன் குழம்பு, ஆட்டுக்கடாவின் குடல் கறிக்கூட்டு, சிறு பயிறு, ஆட்டுப்பால், தென்னங்குருத்து, பனம்பழம், நுங்கு, கொண்டைக்கடலை, வான்கோழி இறைச்சி, சுக்குக்காப்பி முதலான இயற்கை சார்ந்த உணவை உண்டு தம் உடல் நலத்தைப் பாது காத்தனர்.

'நாளைக்கு எங்க வீட்ல கேப்பைக்களி…அவசரமாக கேப்பை மாவு திரிக்கிறேன், தேனும், தினைமாவும் தின்னக் கொடுத்து வைக்கணுமே, ஆட்டுப்பால் அடுப்புல இருக்கு, ஓட்டலில் சீலா மீன் குழம்புடன் நன்கு சாப்பிட்டார்கள், சீனியும் மாவும் வாங்கித் தரேன்னு கூட்டிட்டு வந்து வெறும் படத்தை காட்டி ஏமாத்திட்டாங்க, கொல்லாம் பருப்பு, மொச்சைப் பயறை ஒரு குழலில் தட்டி பகிர்ந்து அனைவரும் உண்டனர். தாளிசம் செய்து கொண்டு வந்த சிறுபயிறு மணக்கிறது, தேங்காய் பன். நுங்கு, பனம்பழம், தென்னங்குருத்து தேனை சுவைத்து சாப்பிட்டார்கள். வான்கோழி இறைச்சியுடன் மத்தியான சாப்பாடு, அவித்த கொண்டைக்கடலை, அன்றைய தின சிற்றுண்டியை அவித்துத் தாளித்த சிறுபயிற்றை அள்ளி அள்ளி தின்றனர். சூடான சுக்குக் காப்பியிலிருந்து ஆவி பறந்தது. தினமும் சுண்ணாம்பு கலக்காத கள்ளை ஒரு கலையம் குடிப்பாங்க, ஆகையினால் நல்ல உடல்கட்டு நோய்நொடி கிடையாது. கள்ளைப் பதநீர் ஆக்கி எல்லோருக்கும் குடிக்கக் கொடுப்பது ஒரு விஞ்ஞான சாதனை' என பலவகையான உணவு பற்றி செய்திகள் இக்கதைகளில் கூறப்பட்டுள்ளன (Jacob, 2019).

## பொழுது போக்குகள்

கரிசல் வாழ் மக்கள் பொழுது போக்கு அம்சங்களுக்கு முக்கியத்துவம் அளித்தனர். 'எங்கள் கலைகள் விலைமதிப்பற்றவை. களியாட்டம், பொம்மலாட்டம், பொய்க்குதிரை ஆட்டம், பாவைக்கூத்து, இளவட்ட கல்லை தூக்கி எறிதல், கூட்டாஞ்சோறு பொங்கி களித்தல், மரத்தில் வடம் கட்டி ஊஞ்சல் ஆடுதல'; போன்ற மக்களின் வாழ்வு வானுயர உயர்ந்த மகிழ்ச்சி தரக்கூடிய பொழுது போக்கு விளையாட்டுகளைப் போற்றி வாழ்ந்தனர்.

'கும்ப ஆட்டம், கரகாட்டம், குயில் ஆட்டம், ஒயிலாட்டம், கழிலாட்டம், சிலம்பாட்டம், வில்லுப்பாட்டு, ராட்டினம் சுற்றல், மாப்பிள்ளை கைகள் பூக்கள், வை ராஜா வை என்ற சூதாட்டம் முதலான விளையாட்டுகளும் இக்கதைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும். வில்லுப்பாட்டுப்பாடி கச்சேரி நடத்தும் பொழுதுபோக்குத் தொழில் கரிசல் வட்டாரத்தில் நடைபெற்றது. 'மெயின் வில்லு பாட்டாளி தங்கச்செயின்கள் சிலுசிலுக்க இங்கிதமாக வந்தமர்ந்தார்' என்ற குறிப்பின் மூலம் அறியலாம் (Jacob, 2019).

## பழமொழி

கரிசல் நிலப்பபகுதி மக்கள் பயன்படுத்தும் பழமொழிகள் அவர்களது பண்பாட்டையும், சூழ்நிலையையும் சார்ந்து வெளிப்படுகிறது.

'நிர்வாண நாட்டில் கோமணம் கட்டியவன் கோமாளி' 'மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போடாத' 'ஒளிர மாடு ஊர் வழி போனா அங்கேயும் கட்டி அடிக்கலாம்' 'ஆத்திரக்காரனுக்கு அந்த கூட போகாது' 'பதறாத காரியம் சிதறாது' 'அவர் வச்சா வரிசை செரச்சா மொட்டை' 'ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம் இறங்கச் சொன்னால் முடவனுக்குக் கோபம் நமக்கு எதற்கு வம்பு' போன்ற பழமொழிகள் மரபுத்தொடர்களாகவும், சொற்றொடர்களாகவும் இச்சிறுகதைகளில் குறிக்கப்படுகின்றன.

## பெயர்கள்

கரிசல் நில மக்கள் பயன்படுத்தும் பெயர்கள் அனைத்தும் அவர்களது வட்டாரம் சார்ந்ததாக உள்ளன. அண்ணாவி, உச்சி மாடி, காக்காச்சி, ஆயிரத்தான், இலங்காமணி, மூக்கம்மாள், ஆண்டி ஆசாரி, ஆழ்வார், பொடி முத்தூர் வாத்தியார், பொன்னாபரணம், ஆண்டிச்சி அம்மா, மாசானம் முதலானவை மாந்தரின் பெயர்களாகக் குறிக்கப்படுகின்றன. ஊர்ப்பெயர்கள் அங்கு நடந்த நிகழ்வுகள் சார்ந்து தோன்றியுள்ளன. குலையன் கரிசல் ராசாங் கோயில். மானூர், மாவிடி. பனைப்பட்டி, உசிலம்பட்டி, ரெண்டும் சொல்வான் முதலான ஊர்ப்பெயர்கள் குறிப்பிடப்படுகிறது. செம்பு வெட்டித் தெரு என்ற ஊர் செம்பு செட்டித்தெரு என்று மருவியது. பொதி மாடுகளை அமர்கின்ற எங்க பாட்டி ஊர் பொத அமர்த்தும் ஊர் ஆகி இன்று புதியம்புத்தூர் என்று மருவி விட்டது.

## சொற்பயன்பாடு

கோட்டி என்ற சொல் பைத்தியம் என்ற பொருளில் வழங்கப்படுகிறது. சிப்பம், கிராக்கி, கறார், கரண்டை, சக்கடா வண்டி, நோக்கால் இல்லை முதலான சொற்கள் பொருட்பெயர்களாக குறிக்கப்படுகின்றன. 'உள்ளேபோய் ஒரு சிப்பம் கருப்பட்டியை தூக்கிட்டுப் போ' 'கரிசல் வட்டார பருத்திக்கு பெரும் கிராக்கி இருந்தது' போன்ற சொற்றொடர்களால் அறியலாம்.

## வரலாறு

கரிசல் வட்டாரப் பகுதிகளில் ஜமீன் ஆட்சி நடைபெற்ற கால கட்டத்தில் பெண்ணடிமைத்தனமும், சாதி ஏற்றத்தாழ்வும், முதலாளி தொழிலாளி வர்க்க வேறுபாடும் நிறைந்து

காணபட்டன. ‘சத்திரப்பட்டி நிலப்பிரபுத்துவ அமைப்பு வட்டாரப்பகுதிகளில் நடந்த கொடுங்கோல் ஆட்சியை’ இக்கதைகளில் ஆசிரியர் எடுத்துரைக்கிறார்.

‘சத்திரப்பட்டி ஒரு ஜமீன் ஆட்சிக்கு உட்பட்ட கிராமம். ஜமீன்கள் என்றால் நிலப்பிரபுத்துவக் குடும்ப அமைப்பு. ஜமீனின் கிராமங்கள் ஜமீனுக்கு அடிமைப்பட்ட கிராமங்களே. அங்கு காட்டு தர்பார் ஆட்சிதான் கொடி கட்டி பறக்கும். செவல்பட்டிக்கு பத்துக் கிலோமீட்டர் கிழக்கே உள்ள ஊர் சத்திரப்பட்டி. செவல்பட்டி சத்திரம் என்றும் அழைப்பர். செவல்பட்டி இல் தான் ஜமீன்தார் மாளிகை உள்ளது. ஜமீன்தாரின் நிலங்கள் யாவும் சத்திரப்பட்டியில் இருந்தது சரியாக நூறு ஆண்டுகளுக்கு முன்பு 18 மேல்தட்டு குடும்பத்தினர் மட்டுமே வசித்தனர். அவர்கள் கீழ் சாதி மக்களிடம் காட்டிய சாதி வித்தியாசம் மகா கொடுமையாக இருந்தது. உழைக்கும் மக்கள் அரும்பாடுபட்டு செய்து வைத்திருக்கும் பனங்கற்கண்டு, கருப்பட்டி, சிரட்டை தட்டுகளைக் கொள்ளையடித்து செல்வர். இதைவிட கொடுமை பல பெண்கள் மார்பில் சேலை அணியக் கூடாது என்று சட்டம் போட்டனர். அறுவடைக்கு ஜமீன்தார்கள் சத்திரப்பட்டி வரும்பொழுது தாழ்வு வாலிப பெண்கள் மார்பில் துணி இல்லாமல் வாங்கி அவர்களை வரவேற்க வேண்டுமாம். அரைநிர்வாணத் தோடு வரவேற்பதுதான் ஜமீன்தார்களுக்குக் கொடுக்கும் மரியாதையாம். இக்கொடுமை சமீப காலம் வரை சத்திரப்பட்டி கிராமத்தில் நடந்துள்ளது நினைக்கும்போது நெஞ்சம் துடிக்கிறது’ (Jacob, 2019).

## முடிவுரை

கரிசல் காட்டுக்கதைகள் கரிசல் வட்டார மக்களின் அன்றாட வாழ்வியலைக் கற்பனை நயத்துடனும், எளிமையான முறையிலும் வெளிப்படுத்தியுள்ளது. கரிசல் காட்டு மாந்தரின் சமூக வாழ்வியல் அடிப்படையிலான கதைகள் என்பதனால் நூலுக்குக் கரிசல் காட்டுக் கதைகள் என்று தலைப்பு வைத்திருப்பினும், அனைத்து மக்களுக்குமான பொதுவான செய்திகள் இக்கதைகளில் புதைந்துள்ளன. கரிசல் என்பது மண் சார்ந்த செய்தி மட்டுமல்ல. வட்டாரத்தில் வாழும் மக்களின் வாழ்வாதாரச் செய்திகளையும், பண்பாடு பழக்க வழக்கங்களையும் நேர்த்தியாக இக்கதைகள் பதிவு செய்துள்ளன.

## References

Gouthama Neelambaran, (2015) karisal kattu kadhaikal, J. P. Ruban Publications, Chennai, India.

Ilasai Aruna, (1976) Karisal iIlakkiyam, Meenakshi Puthaka Nilayam, Madurai, India.

Jacob, R.S., (2015) karisal kattu kadhaikal, J. P. Ruban Publications, Chennai, India.

Jeyaprakasaam, (2019) karisal velanmai, Chennai, India.

Ponneelan, (1976) Karisal, New Century Book House, Chennai, India.

Radhakrishnan, K.S., (2016) Ganthaga boomil karisal illakiyam, Dinamani daily newspaper, India.

Sibichelvan, (2010) Karisal vattara iIlakkiyam, Sibichelvan, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License